# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 382/TPT/2016

ஆணை எண்: 041/2017

நாள்: 27/03/2017

எஸ். சேவியர் ராஜாமணி,
10வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
திங்கள்நகர் பேரூராட்சி,
ஆரோக்கியபுரம், நெய்யூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 802. – முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சி முன்னாள் தலைவி,
திங்கள்நகர் பேரூராட்சி,
திங்கள்நகர்,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திரு. எஸ். சேவியர் ராஜாமணி, திங்கள்நகர் பேரூராட்சி 10வது வார்டு முன்னாள் உறுப்பினரது 30.11.2015 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் உரிய நடவடிக்கைக்காக வரப்பெற்று 0382/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், திங்கள்நகர் பேரூராட்சி 10வது வார்டு முன்னாள் உறுப்பினர், பேரூராட்சி மன்றத் தலைவர் குறித்து தெரிவிக்கப்பட்ட 30.11.2015 நாளிட்ட புகார் மனுவில், பேரூராட்சி நவீன மீன் மார்க்கெட் ரூபாய் 20 இலட்ச மதிப்பீட்டில் வேலை செய்ய மன்ற அனுமதியுடன் தீர்மானம் செய்துவிட்டு, மீன் சந்தை வேலை செய்யாமல் வேலை இடத்தின் பெயரை

மாற்றி, மீன் சந்தை போகும் பாதையில் அலங்கார தரை ஓடு போடும் வேலை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும், அலங்கார தரை ஓடு போட ஒரு மீட்டருக்கு ரூ.650/- தான் ஆகும் எனவும் ஆனால், அதிகப்படியாக 1 மீட்டருக்கு ரூ.1250/- என மதிப்பிட்டு வேலை நடப்பதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு வேறு சில வேலைகளும் முறையான அனுமதி பெறாமல், புதிய ஒப்பந்தக்காரர்கள் வழியாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.382/TPT/2016 நாள்:09.05.2016ன்படி மனுதாரின் முறையீட்டு மனுவினை உரிய படிவத்திலும் நீதிமன்றவில்லை ஒட்டப்பட்டும் சமர்ப்பித்திட ஆணையிடப்பட்டது. அவ்வகையில் மனுதாரர் முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கவில்லை எனினும், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(1)ன் படி முறையீடாகக் கருதி மனுதாரர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

மேலும், 28.11.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.382/TPT/2016ன் வாயிலாக மேற்படி மனுதாரரின் முறையீடு மீது செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவிக்கப்பட்டது. செயல் அலுவலர் கடித ந.க.எண்.275/2015/அ1/ நாள்: 20.12.2016ல் தனது விளக்க அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"கன்னியாகுமரி மாவட்டம் திங்கள்நகர் பேரூராட்சியில் தினசரி மீன் சந்தை அதில் உள்ள பணிகள் செய்யும் பொருட்டு இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.471, நாள்: 26.09.2014ன்படி பணி தேர்வு செய்யப்பட்டு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி கடித எண்.மூ.மூ. எண்.ப1/680/2015, நாள்: 12.02.2015ன் படி பெற்றும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி பெற்றும் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள பணிகள் மட்டும் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது. அரசு நிர்ணயிக்கப்பட்ட விலை விவர பட்டியல் (Standard Schedule of Rate's – 2015-2016) படி தயாரிக்கப்பட்ட Data-வின்படி விலை நிர்ணயிக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்து பணி நடைபெற்று பணி முடிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சியில் அனைத்து ஒப்பந்த விளம்பரங்களும் ஒளிவுமறைவற்ற நடைமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்படும்போது அனைத்து பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கும் விளம்பர அறிவிப்பு அனுப்பப்பட்டு வருகிறது. அனைத்து பணிகளும் உரிய நடைமுறையை பின்பற்றி பொறியாளர் பிரிவின் மேற்பார்வையில் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்தப் பணிகளிலும் முறைகேடுகள் எதுவும் நிகழவில்லை. மதிப்பீடு மற்றும் வேலை உத்தரவு, உடன்படிக்கை

ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்து பணிகளும் முறையாக நடைபெற்று வருகிறது. அனைத்து திட்டப் பணிகளும் முறையாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு பொறியாளர் பிரிவினரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு, மேலளவு செய்யப்பட்டதன் அடிப்படையிலேயே தொகை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. அரசு நிதியோ, பொது நிதியோ தவறாக பயன்படவில்லை." எனத் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய நிலையில், அனைத்தும் முறையாக பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் முறையீட்டு மனுவினை உரிய முறையில் விதிகளின்படி இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்கவில்லை. மேலும் இம்முறைமன்ற அழைப்பாணையின்படி விசாரணைக்கும் ஆஜராகவில்லை. இந்நிலையில் செயல் அலுவலர், சமர்ப்பித்துள்ள கருத்துக்களை ஏற்று முறையீட்டு மனுவினை நிராகரிக்கலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017

செயலாளர்.

7-4 7/4/17

பெறுநர்

1. எஸ். சேவியர் ராஜாமணி,
   திங்கள்நகர் பேரூராட்சி,
   10வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
   ஆரோக்கியபுரம், நெய்யூர் அஞ்சல்,
   கன்னியாகுமரி மாவட்டம் – 629 802.

2. செயல் அலுவலர்,
   திங்கள்நகர் பேரூராட்சி,
   திங்கள்நகர்,
   கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்

உதிரி - 5